SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FIRST YEAR EXAMINATIONS IN BACHILOR OF COMMERCE (EXTERNAL) – 2011/2012

HELD IN APRIL / MAY 2013

## B.COM 16(II) – FINANCIAL ACCOUNTING - II

கல்குலேட்டர்கள் அனுமதிக்கப்படும் . எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

01. பின்வரும் பரீட்சைமீதியான Unity நிறுவனத்துடன் கணக்கேட்டு புத்தகங்களிலிருந்து 31.03.2012 இல் பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

| | வரவு - ரூபா | செலவு - ரூபா |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | | |
| சாதாரணபங்குகள்- ஒவ் ரூபா 10 ஆனவை 45000 | | 450000 |
| 10% முன்னுரிமைபங்குகள்- ஒவ்.ரூபா 10 ஆனவை 15000 | | 150000 |
| கட்டிடம்- கிரயம் | 300000 | |
| மோட்டார் வாகனம் - கிரயம் | 300000 | |
| இயந்திரம் - கிரயம் | 400000 | |
| தளபாடமும் சொத்துக்களும் - கிரயம் | 100000 | |
| திரண்டபெறுமானத் தேய்வு: | | |
| கட்டிடம் | | 30000 |
| மோட்டார் வாகனம் | | 30000 |
| இயந்திரம் | | 20000 |
| தளபாடமும் சொத்தக்களும் | | 10000 |
| 01.04.2011 இல் இருப்பு | 80000 | |
| பொதுஒதுக்கம் | | 40000 |
| மீள் மதிப்பீட்டுஒதுக்கம் | | 50000 |
| கடன் பட்டோர் | 75000 | |
| கடன் கொடுத்தோர் | | 45000 |
| சம்பளம் | 140000 | |
| வாடகை | 20000 | |

| | | |
|---|---|---|
| மின்சாரம் | 20000 | |
| பணிப்பாளர் கொடுப்பனவு | 118000 | |
| கணக்காய்வுகட்டணம் | 25000 | |
| காப்புறுதிகட்டணம் | 54000 | |
| விளம்பரம் | 12000 | |
| விநியோகச் செலவினம் | 48000 | |
| விற்பனை மேம்படுத்தல் செலவு | 54000 | |
| வருமதி உண்டியல் | 54000 | |
| நிதிச் செலவுகள் | 10000 | |
| 10மூ தொகுதிக் கடன்கள் | | 100000 |
| செலுத்தியவரி | 28000 | |
| கொள்வனவுகள் | 2500000 | |
| விற்பனைகள் | | 4400000 |
| விற்பனை திரும்பல் | 10000 | |
| கொள்வனவு திரும்பல் | | 20000 |
| முதலீடுகள்: | | |
| விலை கூறப்பட்ட முதலீடுகள் | 200000 | |
| விலை கூறப்படாத முதலீடுகள் | 100000 | |
| செலுத்திய தொகுதிக்கடன் வட்டி | 6000 | |
| வங்கி | 500000 | |
| கையிலுள்ளகாசு | 159000 | |
| இலாப நட்டகணக்கு மீ.கீ.வ | | 170000 |
| பெறவேண்டியவைகள் | 200000 | |
| | 5515000 | 5515000 |

மேலதிகதகவல்கள் பின்வருமாறு,

i. 31.03.2012 இல் உள்ள இறுதி இருப்பின் பெறுமதிரூபா 350000

ii. ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு மொத்தக் கடன் பட்டோரில் 10%ஏற்பாடு செய்க

iii. இறுதிக் காலாண்டு வரி மதிப்பீடு ரூபா 16000

iv. நிறுவனத்தின் பெறுமானத் தேய்வு கொள்கையானது கொள்வனவு செய்யும் ஆண்டில் முழு பெறுமானத் தேய்விற்கும், விற்பனை செய்யும் ஆண்டில் பெ.தே செய்வதில்லை என்பதாகும்.

v. பெறுமானத் தேய்வுவீதங்கள் பின்வருமாறு:

கட்டிடம் 5% நேர் கோட்டு முறையில்

மோட்டார் வாகனம் 10% நேர் கோட்டு முறையில்

இயந்திரம் 10% நேர் கோட்டுமுறையில்

தளபாடமும் சொத்துக்களும் 10% நேர் கோட்டுமுறையில்

vi. ஏப்ரல் 2009யில் ரூபா 100000 யிற்குகொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்றுவருட காலப்பகுதியில் ரூபா 50000 க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை பெறுவனவு விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இவ்விற்பனை சம்பந்தமாக வேறு எந்தப் பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

vii. செலுத்தவேண்டிய வாடகை ரூபா 10000, முற்பண மின்சாரம் ரூபா 4000.

viii. நிறுவனத்தின் இயக்குணர் சபை பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டது.

(அ) பொது ஒதுக்கத்திற்கு ரூபா 40000 யினைமாற்றுதல்.

(ஆ) முன்னுரிமை பங்கிலாபத்தை செலுத்துதல்.

(இ) சாதரண பங்குதாரர்களுக்கு 15%பங்கிலாபத்தை பிரகடனம் செய்தல்.

ix. 5000 சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் 12 ரூபா விலையில் உரிமை வழங்கல் மூலம் வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைக்கு எந்தவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

நிறுவனம் பிரசுரிக்கத்தக்கதாக பின்வருவனவற்றை தயாரிக்குக.

1. 31.03.2012 முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று
2. 31.03.2012 இல் உள்ளபடியான ஓர் ஐந்தொகை
3. உரிமைமாற்றல் கூற்று
4. சொத்து, பொறி, உபகரண அசைவுக் கூற்று

(45 புள்ளிகள்)

02. பீற்றர் நிறுவனம் 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டில் மேற்கொண்ட முதலீட்டு நடவடிக்கைகள் பின்வருமாறு. நிறுவனம் அத்திகதியில் தனது கணக்கேடுகளை முடிவுறுத்துகின்றது.

2011:

ஏப்ரல் 01 : ரூபா 100000 பெறுமதியான 9% தொகுதிக்கடன்கள் ஒவ்வொன்றும் 98 ரூபாவிலையில் (ஒவ்வொன்றும் 100 ரூபாஆனவை) Cum.int அடிப்படையில் கொள்வனவுசெய்யப்பட்டது.

வட்டியானது ஜனவரி 01 யிலும், ஜுலை 01 யிலும் ஒவ்வொருஆண்டும் செலுத்தப்படும்.

ஏப்ரல் 01 : ரூபா 15000 பெறுமதியானசாதரணபங்குகள் 9 ரூபாவிலையில் கொள்வனவுசெய்யப்பட்டது. (ஒவ். 10 ரூபாஆனவை)

மே 01 : ரூபா 7500 பெறுமதியான 8%திறைசேரிஆவணங்கள் ஒவ்வொன்றும் 97 ரூபாவிலையில் (ஒவ். 100 ரூபாவானவை) ex.int.அடிப்படையில் கொள்வனவுசெய்யப்பட்டது.

வட்டியானது மார்ச் 03யிலும், செப்டம்பர் 30 யிலும் ஒவ்வொரு ஆண்டும் செலுத்தப்படும்.

ஜுன் 01 : ரூபா 50000 பெறுமதியான சாதரணபங்குகள் ஒவ்வொன்றும் 11 விலையில் கொள்வனவு செய்யப்பட்டது. (ஒவ் 10 ரூபாவை)

ஜுலை 01 : ரூபா 50000 பெறுமதியான 9% தொகுதிக்கடன்கள் ஒவ்வொன்றும் 101 ரூபாவிலையில் (100 ரூபாவை) cum.int அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.

செப்டம்பர் 01 : ரூபா 50000 பெறுமதியான 9%தொகுதிக்கடன்கள் ஒவ்வொன்றும் 102 ரூபா விலையில் cum.int அடிப்படையில் விற்பனைசெய்யப்பட்டது.

ஒக்டோபர் 31 : ரூபா 50000 பெறுமதியான 8%திறைசேரி ஆவணங்கள் ஒவ்வொன்றும் 99 ரூபா விலையில் cum.int அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது.

டிசம்பர் 01 : சாதரண பங்குகளுக்கான இடைக்கால பங்கிலாபமாக ஒவ்வொருபங்கிற்கும் ரூபா 1.00 பெறப்பட்டது.

2012

ஜனவரி 01 : சாதரணபங்குகளுக்கு 4:1 விகிதத்தில் உபகாரப் பங்குகள் பெறப்பட்டது.

ஜனவரி 31 : ரூபா 100000 பெறுமதியான சாதரணபங்குகள் ஒவ்வொன்றும் ரூபா 12 விலையில் விற்பனை செய்யப்பட்டது.

பெப்ரவரி 28 : சாதாரண பங்குகளுக்கு இறுதிப்பங்கிலாபமாக ஒவ்வொரு பங்கிற்கும் ரூபா

1.50 பெறப்பட்டது.

எல்லா வட்டிவரு மானங்களுக்கும், பங்கிலாப வருமானங்களும் உரியதிகதிகளில் பெற்றுக் கொள்ளப்பட்டன எனக் கருதிக் கொள்க. வரியனையும் ஏனைய கட்டணங்களையும் புறக்கணிக்குக.

31.03.2012 யில் முடிவடைந்த ஆண்டுக்கான முதலீட்டுக் கணக்குகளைத் தயார் செய்க.

(30 புள்ளிகள்)

03. Smith நிறுவனம் MM நிறுவனத்துடன் ஒரு அரைக்கும் இயந்திரத்தினைநிதிக் குத்தகைக்கு பெற்றுக் கொள்ளும் ஒப்பந்தம் ஒன்றினை 01.08.2017 யில் மேற்கொண்டது. வருடாந்த தவணைப் பணமாக ரூபா 30000 யினை ஒவ்வொரு ஆண்டிலும் ஜுலை 31யில் செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தமானது 5 அண்டுக்களுக்காகும். அத்துடன் சொத்துக்களது ஆயுட்காலமானது ஏறத்தாழ ஆண்டுகளாக காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இயந்திரம் வெளியில் வாங்குவதாயின் Smith நிறுவனத்துக்கு ரூபா 119780 ஏற்படும்.

நிதிக்கிரயம் ஆண்டுக்கு 8% ஆகும்.

Smith நிறுவனம் அதனுடைய சொத்துக்களுக்கு நேர்கோட்டுமுறையில் பெ.தெ. மேற்கொள்ளப்படுகின்றது.

வேண்டப்படுவது:

I. மேற்படிநிதிக் குத்தகைக்கான"Actuarial"முறையிலான ஒரு கூற்று.
II. Smith நிறுவனத்தின் புத்தகங்களில் தேவையான பேரேட் டுகணக்குகளை தயார் செய்க.

(25 புள்ளிகள்)